செ.வெ.எண்: 566 நாள்: 04.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**கோவிட் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் மஹாளய அமாவாசையை முன்னிட்டு கடலில் நீராட மற்றும் தர்ப்பணம் செய்ய மற்றும் முக்கிய வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல அனுமதி இல்லை.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை பரவாமல் கட்டுப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மஹாளய அமாவாசையை முன்னிட்டு சாந்தார் அம்மன் சன்னதி உள்ளிட்ட முக்கிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மணமேல்குடி தாலுகா கோடியக்கரையில் கடலில் குளிப்பதற்கும் மற்றும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்யும் பொருட்டு பொதுமக்கள் அதிக அளவில், ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் கூட்டமாக கூடும் வாய்ப்புள்ளதால் அரசின் அறிவுரைகளின்படி கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன் செவ்வாய் மற்றும் புதன்கிழமை (05/10/2021 மற்றும் 06/10/2021) ஆகிய நாட்களில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சாந்தார் அம்மன் சன்னதி உள்ளிட்ட முக்கிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மணமேல்குடி தாலுகா கோடியக்கரையில் மஹாளய அமாவாசையை முன்னிட்டு கடலில் குளிப்பதற்கும் மற்றும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்யவும் அனுமதி இல்லை.

அரசால் அனுமதிக்கப்பட்ட விழாக்கள், நிகழ்வுகளைத் தவிர இதர விழாக்கள் நடத்தப்பட்டாலும், அரசு தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளுக்கு மாறாக எவ்வித விழாக்கள், நிகழ்வுகள் நடத்தப்பட்டாலும் அவர்கள் மீது பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் கட்டுப்படுத்திடும் பொருட்டு பொதுமக்கள் முகக்கவசம் அணியவும், மக்கள் சமூக இடைவெளியினை முறையாகக் கடைபிடிக்கவும், கைகளை அடிக்கடி கழுவிடவும், அவசியமின்றி வெளியூர் பயணங்களை தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

கொரோனா நோய்த் தொற்றினை கட்டுப்படுத்திடும் பொருட்டு அரசு வழங்கியுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை தனிநபர் மற்றும் பொதுநலனுக்காக அனைவரும் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**